
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1016

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

88

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## இலட்சியப்பாதையில் புதுவேகம்!




ஓவியம் : சிகரன்

2026 சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் 5 மாதங்களே உள்ளன. கூட்டணிக் கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன எதிர்க்கட்சிகள். ஆனால், ஆளும்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகமோ, 'அறிவுத் திருவிழா' கண்டு, கொள்கைக் கணக்கைக் கூட்டியிருக்கிறது. அறிவுத் திருவிழாவின் அங்கமாக இடம்பெற்றிருக்கிற முற்போக்கு புத்தகக் காட்சியின் மூலம் புதிய இலட்சியப் பாதை ஒன்றையும் திறந்திருக்கிறது. பகுத்தறிவுச் சமூகமாக தமிழ்ச் சமூகம் திகழ வேண்டுமென்ற இந்த இலட்சிய நோக்கம் தி.மு.கழகத்திற்கு பவள விழா ஆண்டில் முளைத்தது அல்ல, ஒன்றரை வயது குழந்தையாக தி.மு.கழகம் இருந்தபோதே இதே அக்கறையைக் காட்டியிருக்கிறது.

அது, திண்டிவனத்தில் முதல் சீர்திருத்த மாநாடாக வெளிப்பட்டது. 1951 மே 20-இல் நடைபெற்ற இந்தச் சீர்திருத்த மாநாட்டை 'புதிய இலட்சியப் பாதையின் தொடக்கம்' என 'திராவிட நாடு' இதழில் எழுதினார் அண்ணா. திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது சுற்றாக நடைபெற்ற மாவட்ட மாநாடுகள் அனைத்தும் முதல்நாள் சமூக சீர்திருத்த மாநாடாகவும், இரண்டாவது நாள் அரசியல் மாநாடாகவும் நடைபெற்றன. சீர்திருத்த மாநாடுகளில் பகுத்தறிவுச் சிந்தனைகளை கிளறி, அறிவார்ந்த தமிழ்ச்சமூகத்தை அமைத்திடும் வண்ணம், உரை நிகழ்த்தினர் கழகப் பேச்சாளர்கள். முதல் மாநில மாநாட்டிற்கு முன்பே, நடைபெற்ற இந்தச் சீர்திருத்த மாநாடுதான் அதற்கான விதையாக இருந்திருக்கலாம்.

நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.இராமசாமி மாநாட்டைத் தொடங்கிவைத்தார். கே.ஆர். செல்லமுத்து, நாகூர் ஹனிபாவின் இன்னிசை நிகழ்ச்சிகள் மாநாட்டிற்கு சுவை கூட்டின. 'பிரசண்ட விகடன்' நாரண துரைக்கண்ணன் மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். இரவு 'சந்திரமோகன்' நாடகம் நடைபெற்றது. அதில் கழகப் பொதுச் செயலாளராக இருந்த அண்ணாவும் பங்கேற்று நடித்தார்.

'சமூகச் சீர்திருத்தம் அரிய முயற்சி மட்டுமல்ல, கூட்டுமுயற்சி. அறிவுலகம் அன்புடன் அழைக்கிறது வாரீர்' எனச் சீர்திருத்த மாநாட்டிற்கு அழைப்பு விடுத்தார் அண்ணா. ஐரோப்பிய அறிவொளி சிந்தனையாளர்கள் வால்டேர் மற்றும் ரூசோ, அமெரிக்காவின் ஆபிரகாம் லிங்கன் மற்றும் மார்டின் லூதர் கிங், துருக்கியின் முஸ்தபா கமால், சீனாவின் சன்- யாட் - சென், கேரளத்தின் நாராயண குரு, வங்கத்தின் ராஜாராம் மோகன்ராய் போன்ற உலகளாவிய சீர்திருத்த அறிஞர்களைப் பற்றி, இம்மாநாட்டில் நாவலர் நெடுஞ்செழியன், ஈ.வி.கே.சம்பத், கே.ஏ.மதியழகன், கலைஞர், ஏ.கே.வேலன், காஞ்சி கல்யாணசுந்தரம், சிற்றரசு, ஆசைத்தம்பி, வில்லாளன், இராம.அரங்கண்ணல் உள்ளிட்டோர் எடுத்துச்சொல்லி தி.மு. கழகம் மாபெரும் அறிவியக்கம் என்பதைப் பறைசாற்றினர்.

"சீர்குலைந்த திராவிடச் சமுதாயத்தின் நிலை உடைந்த தங்கக்குடம் போல. அதனைப் பகுத்தறிவுத் தணலிலே சுயமரியாதைத் தங்கப்பாளத்தால் உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையைத் தந்துவிட்டது இம்மாநாடு" என்றார் அண்ணா. அன்றும் இன்றும் தி.மு. கழகத்தின் அடிப்படை லட்சியம் சமூகச் சீர்திருத்தம் என்ற இலக்கில் இருந்து இம்மியளவும் பின் வாங்கவில்லை. 'அறிவுலகம் அழைக்கிறது' என்ற அண்ணாவின் அன்றைய அழைப்புதான், 'அறிவுத் திருவிழாவுக்கு வாருங்கள்' என இளைஞர் அணிச் செயலாளர்-துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அழைப்பாக மருவியிருக்கிறது. இலட்சியப் பாதையில் புது வேகத்தைக் கூட்டியிருக்கிறது.

...கூட்டம் திரளும்

## புதிய வரலாற்றை எழுதுகிறது, முத்தமிழறிஞர் பதிப்பகம்!


கழக இளைஞர் அணியின் முத்தமிழறிஞர் பதிப்பகம் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள, 'காலத்தின் நிறம் கருப்பு- சிவப்பு' நூல் நவம்பர் 8-ஆம் தேதி தி.மு.க - 75 அறிவுத் திருவிழாவில் கழகத் தலைவர்- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டு, அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது. வெளியிடப்பட்ட இரண்டே நாட்களில் 5,000 பிரதிகள் விற்பனையாகி இருக்கிறது.

இந்நூல் குறித்து பதிவிட்டுள்ள திராவிடர் தளம் அமைப்பின் அதி அசுரன், "எங்கள் வரலாற்றை எழுத நீங்கள் யார்? சமுதாயத்தின் வரலாறுகளை, எத்தனை காலம்தான் நீங்களே பதிவுசெய்து கொண்டிருப்பீர்கள்? எத்தனை காலம்தான் உங்களது பதிவுகளை எங்களது தலைமுறைகளுக்கான பாடமாகவும் வைப்பீர்கள்? எல்லாவற்றுக்கும் முடிவுரை எழுதுகிறது தி.மு.க. இளைஞர் அணியும் அதன் முத்தமிழறிஞர் பதிப்பகமும்.


தமிழ்நாட்டின் 75 ஆண்டுகால ஜாதி ஒழிப்பு வரலாறு, பெண் விடுதலை வரலாறு, பொருளாதார விடுதலை, மாநிலத் தன்னாட்சி வரலாறுகளின் தொகுப்பாக மலர்ந்துள்ளது 'காலத்தின் நிறம் கருப்பு, சிவப்பு' நூல். இந்நூலுக்கு தமிழ்நாடு முழுவதும் மாவட்டந்தோறும் அறிமுக விழாக்களை நடத்த வேண்டும்.

புதுடெல்லி, மும்பை மற்றும் இந்தியா முழுவதிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் இந்த ஆவணத்தின் மீது விவாத அரங்குகளை நடத்த வேண்டும். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த ஆவணத்தின் வெளியீட்டு விழாவில், தெரிவித்ததைப் போல, இந்நூலின் கட்டுரைகள் சிறு சிறு வீடியோக்களாக வெளியிடப்பட வேண்டும்" என்று பதிவிட்டுள்ளார்.

# பிளாஷ்பேக்



## தலைவர் எடுக்கச் சொன்ன புகைப்படம்!



வழக்கறிஞர் வெங்கடேசன்

1998-ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்துக்காக புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்ட கழக இளைஞர் அணிச் செயலாளராக இருந்த கழகத் தலைவர் அவர்களை, அறந்தாங்கி இளைஞர் அணி சார்பில், வரவேற்றோம். அப்போது இளைஞர் அணித் துணைச் செயலாளராக இருந்த அண்ணன் அன்பில் பொய்யாமொழி அவர்கள் உடன் இருந்தார். எப்போதும் இளைஞர் அணித் தோழர்கள் மீது அன்பு கொண்ட தலைவர், என்னை அவர் அருகில் அமர வைத்து, புகைப்படம் எடுக்கச் சொன்னது மறக்க முடியாத நிகழ்வு.

**- வழக்கறிஞர் வெங்கடேசன், அறந்தாங்கி, புதுக்கோட்டை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

88

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## கடந்த காலத்தைத் திரும்பிப் பார்ப்போம்!




ஒரு சமூகத்தில் நிறுவனங்களின் பங்கு முக்கியமானது. அது கல்வி நிறுவனங்களானாலும் சரி மருத்துவமனை, தொழிற்சாலை போன்ற இதர சமூக சேவை மற்றும் உற்பத்தி நிறுவனங்களானாலும் சரி. சமூகத்தில் நல்ல மாற்றங்கள் உருவாவதற்கு தரமான நிறுவனங்கள் இன்றியமையாதவை.

அப்படிப்பட்ட ஒன்று தான் அடையாரில் (காந்தி நகர்) இருக்கும் சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் (MIDS). இன்றைக்கு தமிழ்நாட்டில் பெரிதும் பேசப்பட்டு ஆளுமைகளைச் செதுக்கியதில் இந்நிறுவனம் முக்கியப்பங்கு வகிக்கிறது. 'திராவிட மாடல்' என்று இந்தியா முழுவதும் பேசுபொருளாவதற்கான வித்து, இங்கிருந்த ஆய்வறிஞர்கள் வெளியிட்ட 'The Dravidian Model' புத்தகத்தின் விளைவாக ஏற்பட்ட ஒன்றே.

இந்த நிறுவனத்தை உருவாக்கியவர் "மால்கம் ஆதிசேசய்யா". 1971-இல் தனது சொந்த முயற்சியில் இந்த ஆராய்ச்சி நிறுவனத்தை அவர் ஏற்படுத்துகிறார். பின்னாளில் ICSSR, ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளின் நிதியின் மூலம் இயங்கி வருகிறது.

UNESCOவின் துணை இயக்குநர் நாயகமாகவும் இவர் பதவி வகித்தார். கலைஞர் முதல்வராக இருந்த காலத்தில் உருவாக்கப்பட்ட மாநில திட்டக் குழுவின்(1971-75) உறுப்பினராகவும், சென்னை பல்கலைக்கழகத் துணைவேந்தராகவும்(1975-1978), மாநிலங்களவை உறுப்பினராகவும் (1978-1984) ஆதிசேசய்யா பணியாற்றினார்.

YOJANA என்ற இதழ் 'திட்டம்' என்ற பெயரில் தமிழ் உட்பட 13 மொழிகளில் 1969 முதல் திட்டக்குழு வாயிலாக வெளிவர தொடங்கியது. இந்த இதழில் மால்கம் ஆதிசேசய்யா எழுதிய கட்டுரைகள் தொடர்ச்சியாக வெளியாக தொடங்கின. அப்படி வெளியான சமகால பொருத்தப்பாடு உடைய கட்டுரைகளின் தொகுப்புதான் 'இந்தியப் பொருளாதாரம் வரலாறு காட்டும் வழிகள்' எனும் இந்நூல்.

பொருளாதாரம், கல்வி, வறுமை ஒழிப்பு, தொண்டு நிறுவனங்கள், நிதி கொள்கை, மதச்சார்பின்மை என பன்மைத்துவக் கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன. MIDS நிறுவனத்தின் 50-ஆம் ஆண்டில் இந்நூல் சிறப்பு வெளியீடாக வெளியாகியுள்ளது. ஆ.அறிவழகன், இதிலுள்ள கட்டுரைகளைத் தொகுத்துள்ளார்.

ஆழமான கருத்துகளும் தரவுகளும் நிரம்பிய கட்டுரைகள், இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அதே சமயம் இவை 80 கள் 90 களில் எழுதப்பட்ட கட்டுரைகள். சமகாலத்தில் இக்கட்டுரைகளின் பொருத்தப்பாடு என்பது நாம் எத்தகைய இலக்குகளை எட்ட முனைந்தோம், நாம் எவற்றை எல்லாம் அடைந்துள்ளோம், என்பதை மீளாய்வு செய்ய முக்கிய ஆவணமாகப் பயன்படும்.

எந்த ஒரு சார்புநிலையும் எடுக்காமல் மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டே இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. காந்தியும் இன்றைய இந்திய பொருளாதாரமும் (1993), வெளிநாட்டு முதலீடும் தாராளமயமாக்கலும் (1994), தொண்டு நிறுவனங்கள், மதச்சார்பின்மையின் இடர்பாடுகள், வறுமை மற்றும் கல்வி பற்றிய கட்டுரைகள் எல்லாம் இன்றைய அரசியல் சூழலில் முக்கியத்துவம் வாய்ந்தவை.

திட்டமிடலுக்கு அதிகாரபரவல் எவ்வளவு முக்கியம் என்பதை ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார், மாநிலங்கள் - நகராட்சிகள்-கிராம பஞ்சாயத்துகள் என படிப்படியான அதிகாரபரவலின் மூலமே திறமையாக திட்டமிடவும் செயல்படுத்தவும் முடியும் என்று தெளிவாகக் குறிப்பிடுகிறார். அரசியல் பொருளாதாரத்தில் ஆர்வமுள்ளவர்கள் தவறாமல் வாசிக்கவேண்டிய புத்தகம்.

...வாசிப்போம்.

# கருவூலம்

## கடலோர நகரங்களை இணைக்க தீர்மானம்!

1958-ஆம் ஆண்டு மே 10 மற்றும் 11-ஆம் தேதிகளில் நடைபெற்ற தஞ்சை மாவட்டக் கழக 3-வது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்களில் ஒன்று, 'கடலோர துறைமுக நகரங்களை இணைக்க வேண்டும் என்பதும். மீன்களையும், கடலோரத்தில் கிடைக்கக்கூடிய இயற்கை வளங்களையும் விரைவில் ஓரிடத்தில் இருந்து மற்ற இடத்துக்குக் கொண்டு செல்ல 'சேது ரோடு' திட்டத்தைச் செயல்படுத்துமாறு அரசை வலியுறுத்தியது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.